

அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண். 131/2016
தேதி 16.08.2016

## ஜல்லிக்கட்டு ஆபத்தான விளையாட்டல்ல – வீர விளையாட்டு
## மத்திய மந்திரி மேனகா காந்தியின் கருத்துக்கு
## சமக நிறுவனத் தலைவர் ஆர் சரத்குமார் கருத்து

தமிழகத்தின் பாரம்பரிய கலாச்சார வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு நடத்த தடை உத்தரவு அமலில் உள்ள நிலையில் உச்சநீதிமன்றத்தில் இது தொடர்பான வழக்கு நிலுவையில் உள்ளது. ஜல்லிக்கட்டுக்கான தடை உத்தரவு நீக்கப்பட வேண்டும் என்று மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் சூழலில் ஜல்லிக்கட்டு என்றால் என்ன? எப்படி நடத்தப்படுகிறது? என்று எந்த விவரமும் தெரியாமல் ஜல்லிக்கட்டு ஆபத்தான விளையாட்டு என கூறுவது வேடிக்கையாக உள்ளது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சி தலைவி அவர்கள் வலியுறுத்தியும், மற்ற இயக்கங்கள் தொடர்ந்து இதற்காக போராடி வரும் நிலையிலும், ஜல்லிக்கட்டுக்கு எதிராக குரல் கொடுத்து, இது ஆபத்தான விளையாட்டு என்று இந்த வீர விளையாட்டை பற்றி தெரியாதவர்கள் தொடர்ந்து குறைகூறிக் கொண்டு வருவதிலிருந்தே அவர்கள் அனைவரும் தமிழரின் உணர்வை மதிக்கத் தவறியவர்கள் என்று தெரிகிறது. தமிழ் இனத்திற்கு விரோதமாக, தமிழர்களின் உணர்வை புண்படுத்தும் நோக்கில் மத்திய மந்திரி மேனகா போன்று சிலர் செயல்பட்டு வருவதனாலேயே உச்சநீதிமன்றத்தில் இன்னும் வழக்கு நிலுவையில் உள்ளது.

ஜல்லிக்கட்டு வீரத்தின் வெளிப்பாடகவும், நம்முடைய கலாச்சாரத்தின் ஒரு பகுதியாகவும் இருந்து வருகிறது. ஆதலால் இந்த வீரவிளையாட்டில் காளைகள் எந்த விதத்திலும் துன்புறுத்தப்படுவதில்லை. ஸ்பெயின் போன்ற மேலைநாடுகளில் காளைகளை ஈட்டியால் குத்தி கொல்லும் போட்டியில் காளைகளுக்கும் ஆபத்து, எதிர்த்து நிற்பவர்களுக்கும் ஆபத்தே தவிர நம்முடைய வீர விளையாட்டு ஆபத்து இல்லை. எத்தனையோ கலாச்சார அடையாளங்களை இழந்து, எஞ்சி நிற்கும் ஜல்லிக்கட்டை வாழும் காலத்தில் இழந்து விடக்கூடாது என்று தவிக்கும் தமிழ் மக்களின் உணர்வை, வீர இளைஞர்களின் செயல்திறனை தரம் தாழ்த்தும் எந்த சொல்லும் தவறானதே. எனவே மத்திய மந்திரி மேனகா தாம் கூறிய கருத்தை திரும்பப் பெற வேண்டும் என்று அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும் வலியுறுத்துகிறேன்.

நன்றி, வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்,

**ஆர்.சரத்குமார்** B.Sc
தலைவர்